திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்கூரிலுள்ள மருத்துவமனையில் பெண் டாக்டர் இல்லாமல் இருப்பதைப் போல், ஏறத்தாழ 161 இடங்களில் மேலும் நியமிக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு பெண் டாக்டர்கள் பலர் இருக்கிறார்கள். மாண்புமிகு டாக்டர் ஹண்டே அவர்கள் சுகாதார அமைச்சராக இருக்கின்ற இந்தக் காலத்திலே, ஏராளமான பெண் டாக்டர்களைத் தாராளமாக நியமித்து, டாக்டர்கள் இல்லை என்று சொல்கின்ற அளவிலே நியமிப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்? திருமங்கலத்திலே இந்த மாதிரி பெண் டாக்டர் இல்லை என்று சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 161 இடங்களிலே பெண் டாக்டர்கள் இல்லை என்று நான் சொல்லவில்லை. 161 இடங்களிலே கூடுதலாக, அடிஷனல் டாக்டர், ஒரு போஸ்ட் கிரியேட் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கான பைனான்சியல் இம்ப்ளிகேஷன்ஸ் எவ்வளவு என்பதைப் பார்க்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியின் சேர்மனாக இருக்கிறார்கள். நிதி நிலை எவ்வளவு என்பதையெல்லாம் ஆராய்ந்து, அதற்குரிய கணக்குகளையெல்லாம் புராபோசலாக அனுப்பியிருக்கிறார்கள். எவ்வளவு ஆகும் என்பதைப் பார்த்து, அந்த 161 இடங்களில் அடிஷனல் டாக்டர்கள் தேவைப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். சில இடங்களில் பெண் டாக்டர்கள் இருக்கிறார்கள். ஆனால் அங்கு ஆண் டாக்டர்கள் தேவைப்படுகிறது. அந்த மாதிரியான புரபோசல்தான் இது. அந்த அடிஷனல் டாக்டர் வேண்டுமென்ற இந்த புரபோசல் லிஸ்டிலே இந்த மருத்துவமனை வந்திருக்கிறது. திருமங்கலம் வந்திருக்கிறதா என்று கேட்டால், அது எனக்குத் தெரியாது.

எட்டயபுரம் அரசு மருத்துவமனை.

வினா எண் 982—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரத்திலுள்ள அரசு மருத்துவமனையை விஸ்தரிக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அப்பணிகள் எந்நிலையில் உள்ளன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை,

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டையபுரம் அரசு மருத்துவமனையில் தற்சமயம் எத்தனை டாக்டர்கள் வேலை செய்கிறார்கள்? அங்கே வேலை செய்கின்ற டாக்டர்கள் மாற்றப்பட்டு, அது பூர்த்தி செய்யப் படாமல் இருக்கிறது என்பது பற்றி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிப்புகளை எல்லாம் என்னிடத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக் கிறார்கள். உடனடியாக கவனிக்க வேண்டுமென்பதற்காக நாம் எந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என் பதை இந்த அவையிலே சொல்வது பொருத்தமாக இருக்கும்.

As there have been repeated representations from the public and M.L.A.s for increase of beds in the hospitals, the Director of Medical Services and Family Welfare submitted proposals for construction of buildings for hospital at Ettayapuram with 20 beds and Labour-*cum*-Operation Theatre and a small kitchen at a cost of Rs. 5 lakhs.

புரபோசல் வந்திருக்கிறது. ஆனால், வந்த பிறகு அதை பார்ட் இரண்டு ஸ்கீமிலே சேர்க்க வேண்டுமென்று சொல்லப்பட்டது.

The proposal has however been deferred due to paucity of funds. There is a Public Health Centre at a distance of 6 K. Ms and a Government Hospital at Koilpatti at a distance of 16 K. Ms.

இந்தக் காரணங்களைச் சொல்லி, அதாவது 8 கிலோ மீட்டர் தூரத்திலே ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் இருக்கிறதென்றும், 16 கிலோ மீட்டர் தூரத்தில் கோவில்பட்டியில் ஒரு பெரிய மருத்துவமனை இருக்கிறது என்றும் சொல்லி, அது போஸ்ட்போன் செய்யப்பட்டு, டெபர் ஆகியிருக்கிறது. இருந் தாலும், நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல் கிறேன், மீண்டும் இந்த புரோபசலை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, சில வித விழாக் கள், சில நிகழ்ச்சிகள் நடைபெறுகிறபோது அந்தப் பகுதிக்கு அபிவிருத்தி, விமோசனம் ஏற்படுகிறது. அதுபோல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நாம் பாரதியாரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறபோது, எட்டையபுரத்திற்கு முன்னு ரிமை கொடுத்து, இந்த மருத்துவ மனையை விரிவுபடுத்து வதற்கு முயற்சி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்?

1981 [மே 5]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்கள் சொல்கிற நேரத்தில் அந்த கருத்தைத்தான் சுட்டிக்காட்டினார்கள். அந்த கருத்தின் அடிப்படையில் மீண்டும் பரிசீலனை செய்வதற்கு ஆணை இடுகிறோம் என்று சொன்னேன்.

விழுப்புரம் அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே மற்றும் எலும்பு முறிவுச் சிகிச்சை பிரிவுகள் அமைக்கும் திட்டம்.

வினா எண் 983—திரு. கு. ப. பழனியப்பன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே பிரிவு எலும்பு முறிவுச் சிகிச்சைப் பிரிவு ஒன்றும் அமைக்க அரசு குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஏற்கனவே 100 எம். ஏ., எக்ஸ்ரே பிரிவு பொருத்தப்பட்டுள்ளது. எலும்பு முறிவுச் சிகிச்சைப் பிரிவு அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திருத்தணி வட்ட அரசு பொது மருத்துவமனை.

*வினா எண் 984—திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி வட்ட அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட உள்ளிருப்பு படுக்கைகள் எத்தனை?

(ஆ) படுக்கைகள் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் எண்ணம் உள்ளதா?

(இ) ஆம் எனில் எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) 32.

(ஆ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.